சென்று வாக்களிக்க வேண்டிய அவசியம் ஏற்படாத அளவுக்கு இடங்கள் அமைய வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அவர்கள் சிலபல இடங்களில் குறிப்பிட்ட பள்ளிகளில், குறிப்பிட்ட கட்டிடங்களில் இருக்க வேண்டுமென்று சொல்லுகின்றபொழுது, தனித் தனி குடிசைவாழ் பகுதிகளாக இருந்தால் அங்கிருந்து இங்கு வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, தொலைவைக் குறைக்க வேண்டும் என்பதும், வாக்காளர்களுக்கு அருகிலே அமைய வேண்டும் என்பதும், ஆகவே ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கான வாக்காளர்கள் கிட்டத்தட்ட 700-க்கு மேற்படாமல் கூடுமானவரை பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை வைத்து தான் இவைகள் முடிவு செய்யப்படுகின்றன. அப்படி இடர்பாடுகள் எங்காவது இருக்குமேயானால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர் ஆராய்ந்து பார்த்து, அதனை மாற்றி அமைப்பதன் மூலம் வாக்காளர்களுக்குப் பலன் ஏற்படும் என்று கருதுவார்களேயானால் அதை அவர்கள் அரசுக்கு சிபாரிசு செய்யலாம். அதற்கு மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 202, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

202—

மணல்மேடு பேரூராட்சி அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர்கள் நியமனம்.

** 16771—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையில் மணல்மேடு பேரூராட்சி அரசு மருத்துவமனையில் கடந்த ஐந்து வருடங்களாகப் பெண் மருத்துவர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பெண் மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போதிய பெண் மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் பெண் மருத்துவரை நியமிக்கும் வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இருப்பினும் இப்போது இந்த மருத்துவமனைக்கு அருகாமையிலே இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையமான நல்லூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் இரண்டு பெண் மருத்துவர்கள் இருக்கிற காரணத்தால் ஒருவரை அங்கே இருந்து மாற்றியமைக்கலாம் என்று நேற்றைக்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

1994 ஏப்ரல் 6]

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 5 ஆண்டுகளாக மயிலாடுதுறை மணல்மேடு பேரூராட்சி அரசு மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லாது இருந்து, நான் இந்த மன்றத்திலே இருமுறை பேசியும், வளர்ச்சி மன்றத்தில் பேசியும் ஒரு பெண் டாக்டரை சென்ற ஆண்டு நியமனம் செய்தார்கள். அந்த மருத்துவ அதிகாரி அவர்கள் 3 மாதம் தான் அங்கு இருந்தார்கள். அதற்குப் பிறகு லீவு போட்டுவிட்டு வேறு ஒரு ஊருக்கு மாற்றிக்கொண்டு போய்விட்டார்கள். அங்கு ஏழை விவசாயிகள் அதிகமாகவும், வசதி இல்லாதவர்களாகவும் இருப்பதனால் பெண் மருத்துவர் ஒருவரை உடனடியாக நியமனம் செய்ய ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி மொத்தமாக குறைபாடு இருக்கிற காரணத்தால், போதிய அளவிற்கு பெண் மருத்துவர் இல்லாத காரணத்தால், இந்தப் பிரச்சினை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த மருத்துவமனையை ஆய்வு செய்தவரை, இதற்கு அருகாமையிலே, 15 அல்லது 20 கிலோமீட்டர் அருகாமையிலே இருக்கிற நல்லூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திலே இரண்டு பெண் மருத்துவர்கள் இருக்கிறார்கள். எனவே, ஒருவரை அங்கேயிருந்து மாற்றியமைக்கலாம் என்று நேற்றையதினம் உத்தரவிடப்பட்டிருக்கிறது. எனவே, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளையே நியமனம் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை உடனடியாக செய்து கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நேற்று அதைப்பற்றிப் பேசினோம். இன்றைக்குச் செய்வார். இன்றைக்கு செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் லீவிலே போவார்களா என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு சில வசதிகள் இருக்கின்றன. நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுத்தால் நீங்களே கேட்கிறீர்கள். அவர்களுக்கு அந்தப் புரவிசன் இருக்கிற காரணத்தாலே – 15 கிலோமீட்டர் தான், எனவே போட சொல்லியிருக்கிறோம். அவர்களிடத்திலே பேசும்படி சொல்லியிருக்கிறோம். நீங்கள் போய் அங்கேயிருந்து பணியாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். கண்டிப்பாக இது நிறைவேறும் என்று நம்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 203, திரு. எஸ். சண்முகநாதன்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.